## "விளையாட்டுத் தலைநகராக சென்னை திகழ்ந்திட, "திராவிட மாடல்" அரசு சென்னைக்கு அருகில்

## செம்மஞ்சேரியில் 100 ஏக்கர் நிலம் கண்டறிந்து ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்த திட்டமான (Global Sports City)

# 'உலகளாவிய ஒருங்கிணைந்த விளையாட்டு நகரம்' உருவாக்கப்பட வேண்டும் !

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் - சிவ.வீ. மெய்யநாதன் வலியுறுத்தல் !

சென்னை, ஆக.21-

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கழக உறுப்பினர் ஆலங்குடி சிவ.வீ. மெய்ய நாதன், "திராவிட மாடல்' அரசு சென்னைக்கு அருகில் செம்மஞ்சேரியில் கண்டறிந்த 100 ஏக்கர் நிலத்தில் ( Global Sports City) உலகளாவிய ஒருங்கிணைந்த விளையாட்டு நகரம் உருவாக்கப்பட வேண்டும் !" என்று வலியுறுத்தினார்.**

சட்டப்பேரவையில் 18.8.2026 அன்று பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைகள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மற்றும் மனித வள மேலாண்மை துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் ஆலங்குடி தொகுதி கழக உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆற்றிய உரை வருமாறு:-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, நவீன தமிழகத்தை உருவாக்கித் தந்த தமிழகத்தின் சிற்பி, தாய்மொழி தமிழ்மொழியை செம்மொழியாக்கித் தந்த, 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொற்கால ஆட்சியைத் தந்த, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் ஒருபெரும் தலைவர், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கான ஓய்வில்லா உழைப்பாளி. மண் மானம், தமிழ்மொழி, இன மானம் காக்கும் போராளி, எங்கள் அஞ்சுகத் தாயின் அருந்தவப் புதல்வர் தலைவர் கலைஞர், காஞ்சித் தலைவன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா, சுயமரியாதை, தன்மானம் பெரிதென வாழ்ந்த தந்தை பெரியார் வழிநடந்து 5 ஆண்டுகாலம் திராவிட மாடல் ஆட்சியைத் தந்த எங்கள் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நில இளைஞர்களின் தன்னிகரில்லாத் தலைவர்; தமிழக இளைஞர்களின் நல்வாழ்வை நோக்கமாகக் கொண்டு, நாளும் உழைக்கும் இளந்தலைவர்; நாட்டையும், சட்டமன்றத்தையும் வழிநடத்தத் தெரிந்த தலைவர்; அடக்குமுறைகளைத் தன் புன்னகையால் வெல்லும் எங்கள் இளந்தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன்.

குறிப்பாக ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் மூன்று முறை போட்டியிடுவதற்கான வாய்ப்பினைத் தந்து, புதுக்கோட்டைக்கு வருகை தந்து, எனது வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்து, மகத்தான வெற்றி தேடித் தந்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும், தேர்தல் நேரத்தில் கடுமையான வெய்யிலிலும், தீவிரமாகத் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொண்டாலும், ஆலங்குடி தொகுதியின் வெற்றி எனக்கு முக்கியம் என்று ஆலங்குடி தொகுதிக்கே வந்து, 35,000-க்கும் மேற்பட்ட மக்கள் நிறைந்த இடத்தில் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றி பெற வைத்த, தமிழ்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆலங்குடி தொகுதியில் மூன்றாவது முறையாக தொடர் வெற்றி. 13,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி தேடித் தந்த ஆலங்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தினுடைய செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்!**

இளைஞர் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், திராவிட மாடல் ஆட்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சராக, துணை முதலமைச்சராக, 5 ஆண்டுக் காலம் பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்த எங்களது இளந்தலைவர், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம் என்ற மகத்தான திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதுமுள்ள 12,525 ஊராட்சிகளில், சுமார் 16,798 விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பினை முதற்கட்டமாக வழங்கினார். இது கிராமங்களுக்கு மட்டும்தானா, நகரப்பகுதிகளுக்கு இல்லையா என்று இளைஞர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, 25 மாநகராட்சிகள், 145 நகராட்சிகள் மற்றும் 479 பேரூராட்சிகளில் சுமார் 12,831 விளையாட்டு உபகரணங்கள் தொகுப்புகளை விளையாட்டு வீரர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கி, விளையாட்டு உபகரணங்களைக் கொண்டுசேர்த்த தலைவர் எங்கள் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

**215 கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகை!**

அதாவது, சர்வதேச மற்றும் தேசிய அளவில் வெற்றி பெறுகின்ற விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் அவர்கள் வெற்றி பெற்றதற்குப் பின்பு, கடந்த காலத்தில் அவர்களுக்கான High cash incentive-உயரிய ஊக்கத் தொகையைப் பெறுவதற்காக பல காலம் மனு அளித்துவிட்டுக் காத்திருப்பார்கள். திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன், எங்கே வெற்றி பெற்றார்களோ, அங்கேயே, வெற்றி பெற்ற 48 மணி நேரத்தில், அவர்களது வங்கிக் கணக்கில் உயரிய ஊக்கத் தொகையை வழங்கிய அரசு, திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 5 ஆண்டுக் காலத்தில் 6,689 விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்கு சுமார் 215 கோடி ரூபாயை உயரிய ஊக்கத் தொகையாக வழங்கி சாதனை படைத்த அரசு, திராவிட மாடல் அரசு. இந்த 100 நாட்களில், பிரக்ஞானந்தா உள்ளிட்ட ஒரு சிலருக்கு ரூ.50 இலட்சம் வரை அத்தகைய உயரிய ஊக்கத் தொகையை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அண்மையில் நைஜீரியாவில் நடைபெற்ற Common Wealth போட்டிகளில், சேலம், வாழப்பாடியைச் சேர்ந்த வாள்வீச்சு வீராங்கனை கனகலட்சுமி என்பவர் தங்கப் பதக்கம் பெற்றார். அவர் போன்றவர்களுக்கு இந்த உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**ஊதியத்துடன் கூடிய விடுப்பு!**

அதேபோன்று, இந்த 5 ஆண்டுக்காலத்தில் விளையாட்டு வீரர்களுக்கான சர்வதேச/தேசிய அளவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டில், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 200-க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாத்த அரசு, திராவிட மாடல் அரசு. அதற்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பணியாற்றியவர் எங்களது இளந்தலைவர். இப்பொழுது எனக்கு வருகின்ற தகவல் என்னவென்றால், அவ்வாறு விளையாட்டு வீரர்கள் அரசு அலுவலர்களாகப் பணியாற்றும்பொழுது, On duty என்று சொல்லக்கூடிய பணிமுறையை வழங்க மறுப்பதாக அறிகிறேன். எனவே, அவர்களுக்கு ஊதியத்துடன்கூடிய விடுப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடைசியாக நடைபெற்ற ஒரு விளையாட்டு விழாவில் மதுரை, மேலூர் பகுதியைச் சேர்ந்த 200 மீட்டர் தேசிய athlete, கோகுல் பாண்டியன் என்பவர் அன்றைக்கு விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த எங்கள் இளந்தலைவர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைத்திருந்தார். SAI-Sports Authority of India விளையாட்டு விடுதிகளைப் பார்த்தால், அங்குள்ள விடுதிகளில் மாணவர்கள் இருக்கின்ற அறைகள், AC குளிரூட்டப்பட்ட அறைகளாக இருக்கின்றன. அதேபோன்று, தமிழ்நாட்டில் இருக்கின்ற 41 sports hostels-விளையாட்டு விடுதிகளில் சுமார் 2,500 பேர் பயிற்சி பெற்று வருவதாகவும், ஆகவே தங்களுக்கும் அத்தகைய வசதி வேண்டுமென்று கேட்டார்கள். ஆட்சிக்கு வந்தால், இந்தத் துறையின் அமைச்சராக நான் பொறுப்பேற்றால், உடனடியாக எனது முதல் கையெழுத்து அதுதான் என்று சொன்னார் எங்கள் இளந்தலைவர்.

வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம், நம் வீட்டுப் பிள்ளைகள் AC கேட்டால் உடனடியாக வாங்கிக் கொடுப்போம். அதேபோன்று, விளையாட்டு வீரர்களைப் பொறுத்தவரைக்கும், அவர்கள் உலகம் விழிப்பதற்கு முன்பாக விழிக்க வேண்டும். பறவைகள், குயில் இவை கூவுவதற்கு முன்பாக அவர்கள் விளையாட்டு மைதானத்திற்குச் செல்ல வேண்டும். அப்படி செல்ல வேண்டுமென்றால், அவர்கள் தங்குகிற அறையில், அவர்களுக்கு சரியான, நிம்மதியான உறக்கம் என்பது மிக மிக முக்கியம். 1 கோடி ரூபாய்தான் செலவு ஆகும், தயவுசெய்து, விளையாட்டு விடுதி மாணவர்களின் நலன் கருதி, AC பொருத்தித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

**ஸ்மார்ட் வாட்ச் வழங்கிடுக!**

அதேபோன்று, கடந்த கால ஆட்சியில், விளையாட்டு விடுதியில் தங்கி இருக்கின்ற மாணவர்களுக்கு smart watch வழங்கப்பட்டது. எவ்வளவு நேரம் அவர்கள் training போகிறார்கள், அவர்களுக்கு எவ்வளவு calories burn ஆகிறது, அவர்கள் எவ்வளவு நேரம் அவர்கள் உறங்குகிறார்கள் போன்றவை விளையாட்டு வீரர்களுக்கு முக்கியம் என்கிற வகையில் smart watch அவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பொழுது புதிதாக விளையாட்டு விடுதியில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு அது இன்னும் வழங்கப்படவில்லை என்று தகவல் வருகிறது. எனவே, அதை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

திராவிட மாடல் அரசினுடைய கோரிக்கையாக தேர்தல் அறிக்கையில் கூறியது, தமிழ்நாடு முழுவதும் ஒலிம்பிக் வீரர்களை உருவாக்குகின்ற வகையில் சென்னை, திருச்சி, மதுரை, நீலகிரி ஆகிய 4 மாவட்டங்களில் ஒலிம்பிக் அகாடமி தொடங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னோம். ஆட்சி பொறுப்பேற்றவுடன், கிராமப் பகுதியில், அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்த வேண்டும், உருவாக்க வேண்டும், ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற வைக்க வேண்டுமென்ற அடிப்படையில், இந்த நான்கு ஒலிம்பிக் அகாடமி சென்னையில் நேரு விளையாட்டு அரங்கில்—திருச்சியில் திருவெறும்பூர் அருகில் உள்ள இலந்தப்பட்டி என்ற கிராமத்தில் 47.87 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் செலவில் அங்கு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. எங்கள் புதுக்கோட்டை மாவட்டம் உள்பட இங்கு இருந்து வருகின்ற விளையாட்டு வீரர்களுக்காக, இந்த ஆண்டு கொள்கை விளக்கப் புத்தகத்தில் படித்துப் பார்த்தேன், 100 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை ஒதுக்கி ஒலிம்பிக் அகாடமியைத் தொடங்கித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொரு விஷயம், சென்னை, திருச்சி, மதுரை என்று கடந்து ஏன் நாம் நீலகிரியை தேர்வு செய்தோம் என்றால், விளையாட்டு வீரர்கள் உலகெங்கும் பயணிக்கின்றபொழுது, தட்பவெப்ப நிலை மோசமாக இருக்கும். ஒரு சில இடங்களில் அதிகமான கடும் குளிரைக்கூட சந்திக்க நேரிடும். அப்படிப்பட்ட நேரத்தில் அந்த வீரர்கள் உலகில் எங்கு சென்றாலும் சமாளிப்பதற்காக, ஊட்டியில் பயிற்சி பெறுவதற்கான நிலையை ஏற்படுத்தினோம்.

**ஊட்டியில் ஒலிம்பிக் அகாடமி!**

அதேபோன்று, oxygen குறைவாக இருக்கக்கூடிய மலைப் பிரதேசத்தில், அவர்கள் பயிற்சி மேற்கொண்டு, அவர்கள் தங்கள் உடலை தயார் செய்து கொண்டால், உலகத்தின் எந்தப் பகுதியிலும், எந்த விளையாட்டுத் திடலிலும் விளையாட முடியும் என்பதற்காக எங்கள் தலைவர் அவர்களின் எண்ணத்தில் உதித்தத் திட்டம் தான், எங்கள் இளம் தலைவர் அவர்கள், நீலகிரி மாவட்டம், ஊட்டியில் ஒரு ஒலிம்பிக் அகாடமியை தொடங்கி வைத்தார் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, Paris 2024, Paralympic போட்டி நடைபெற்றபோது 17 விளையாட்டு வீரர்களுக்கு 7 இலட்சம் ரூபாய் வழங்கி வாழ்த்தி அனுப்பினார். அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த Paralympic badminton வீராங்கனை துளசிமதி முருகேசன் வெள்ளிப் பதக்கம் வென்றார், அதேபோன்று மனிஷா ராமதாஸ் வெண்கலப் பதக்கம் வென்றார், நித்யா ஸ்ரீ சிவன் வெண்கலப் பதக்கம் வென்றார், மாரியப்பன் தங்கவேலு வெண்கலப் பதக்கம் வென்றார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் அன்றைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், ஒலிம்பிக் பதக்கம் பெற்றால், தங்கப் பதக்கம் வென்றால் 3 கோடி ரூபாய், வெள்ளிப் பதக்கம் வென்றால் 2 கோடி ரூபாய், வெண்கலப் பதக்கம் வென்றால் 1 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து, இவர்களுக்காக 5 கோடி ரூபாயை பரிசாக வழங்கியவர் எங்கள் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கி சாதித்தவர் அன்றைய துணை முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள், நானும் படித்துப் பார்த்தேன். அதாவது, இனிமேல் ஒலிம்பிக்கில் வெற்றி பெறுகின்றவர்களுக்கு தங்கப் பதக்கம் வென்றால் 6 கோடி ரூபாய், வெள்ளிப் பதக்கம் வென்றால் 4 கோடி ரூபாய், வெண்கலப் பதக்கம் வென்றால் 3 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். எதிர்காலத்தில் அதை அறிவித்தால் விளையாட்டு வீரர்களின் உற்சாகத்திற்கு அடிப்படையாக அமையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம்!**

அதேபோன்று, விளையாட்டு வீரர்களுக்கு வீட்டின் அருகே விளையாட்டு மைதானம் வேண்டும் என்ற உன்னத திட்டத்தின் அடிப்படையில், தலைவர், எங்களுடைய அன்றைய முதலமைச்சர் இங்கு இருக்கின்ற எங்களுடைய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய இல்லத்திற்கு அருகில் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். 234 தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கின்ற பணியை அன்றைக்குத் தொடங்கினோம். படிப்படியாக இடம் கையகப்படுத்துகின்ற வகையில், 75 தொகுதிகளில் 3 கோடி ரூபாய் மதிப்பில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படுகின்ற பணிகள் நடைபெற்றிருக்கிறது. எஞ்சியிருக்கின்ற 159 தொகுதிகளில் நீங்கள் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை செய்ய இருக்கிறீர்களா? அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றனவா? என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அதேமாதிரி புதியதாக உருவாக்கப்பட்ட ஆறு மாவட்டங்கள். தென்காசி, செங்கல்பட்டு இரண்டு மாவட்டங்களில் தலா ரூ.15 கோடி செலவில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைத்துக் கொடுத்தாகிவிட்டது. அதேமாதிரி ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் அந்தப் பணிகள் தலா ரூ.15 கோடியில் நடைபெறுகின்றன. மயிலாடுதுறை மாவட்டத்திற்கு ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்து, நிலம் மாற்றம் செய்கின்றபொழுது ஆட்சி போய் விட்டது. இப்போது file அப்படியே இருக்கிறது. உடனடியாக அந்தப் பணிகளைத் தொடங்கி, அங்கு மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். காரணம், ஒரு நூலகம் திறக்கப்பட்டால், ஒரு சிறைச்சாலை மூடப்படும்; ஓர் ஊரில் ஒரு விளையாட்டு மைதானம் திறக்கப்பட்டால் ஒரு மருத்துவமனை மூடப்படும் என்கின்ற கருத்துகளின் அடிப்படையில் இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானங்கள் மிக, மிக முக்கியம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கேலோ இந்தியா போட்டி!**

அதேமாதிரி, Khelo India போட்டிகள். ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் இதெல்லாம் நடக்குமா! என்று நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு தமிழ்நாட்டில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் சாதிக்கின்ற வகையில் 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற Khelo India போட்டி ஹரியானாவில் நடைபெற்றது. அப்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஏழாவது இடத்திற்கு வந்தார்கள். 2023 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர், திராவிட மாடல் ஆட்சி நாயகர், நம் பிள்ளைகள் அடுத்த மாநிலம் ஏன்,--தமிழ்நாட்டிலேயே நடத்துகிறேன் என்று அந்த அனுமதியைப் பெற்று வெற்றிகரமாக அந்த Khelo India போட்டியை நடத்தித் தந்த அரசு, திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் என்ன result என்று பார்த்தீர்களென்றால், தங்கப் பதக்கம் 38 பேர், வெள்ளிப் பதக்கம் 21 பேர், வெண்கலப் பதக்கம் 39 என 98 பதக்கங்களைப் பெற்று தேசிய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றது என்றால், திராவிட மாடல் ஆட்சியினுடைய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஏதோ வந்துவிடவில்லை. விளையாட்டுத் துறையினுடைய வளர்ச்சியாக நாம் இதைக் கருத வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

அதேமாதிரி, தமிழர்களுடைய வீரம், பண்பாடு, கலாச்சாரம், இவர்களுக்கு முக்கியமான அந்த ஜல்லிக்கட்டு போட்டிகள், இன்றைக்கு தமிழர்களுடைய அடையாளமாக இருக்கின்ற அந்தப் போட்டிகளுக்கு மதுரையில், அலங்காநல்லூரில் ரூ.63 கோடியில் கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கம் அமைத்துத் தந்தது திராவிட மாடல் அரசு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இப்போது எல்லா இடங்களிலும் மாட்டு வண்டிப் பந்தையங்களெல்லாம் நடத்துகிறார்கள். நடத்தும்பொழுது காவல் துறை வந்து தடுத்துவிடுகிறார்கள். அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை நடத்தி, தமிழர்கள் அந்தப் பந்தையங்கள், போட்டிகள் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**நிதி வழங்கிடுங்கள்!**

அதேமாதிரி, Tamil Nadu Champions Foundation. ரொம்ப, ரொம்ப மகத்தான திட்டம். ஓர் ஊரில் ஒரு விளையாட்டு வீரர் இருப்பார், அவருக்கு விளையாட்டு உபகரணம் வாங்க வழி இருக்காது. பயிற்சியாளர்கள் வழியிருக்காது. வெளிநாடு சென்று பயிற்சி எடுக்க வேண்டும்; அதற்கு வழியிருக்காது. வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும்; அதற்கு வழியிருக்காது. எங்கேயாவது யாரையாவது கேட்டால், பல பேர் அலட்சியப்படுத்தி அவர்களை ஒதுக்கிவிடுவார்கள். அந்த நிலை தமிழ்நாட்டில், இருக்கின்ற வீரர்கள், வீராங்கனைகளுக்கு இருக்கக் கூடாது என்பதற்காக, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தனது சொந்தப் பணம் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்து, Tamil Nadu Champions Foundation தொடங்கப்பட்டது. இதுவரை ரூ.37 கோடியில் தமிழ்நாட்டில் பார்த்தால், எல்லா மாவட்டங்களிலும் பயனடைந்திருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு நிலை என்னவென்றால், sports hostels-ல் இருக்கின்றவர்களுக்கு மட்டும்தான் அந்த Tamil Nadu Champions Foundation நிதி வழங்கப்படுவதாகவும், மற்றவர்களுக்கு அது மறுக்கப்படுவதாகவும் தகவல் வருகிறது. எனவே, sports hostels-ஐப் பொறுத்தவரை அவர்களுக்கு, Government எல்லாவற்றையும், நாம் செய்கிறோம். அவர்களுக்கும் கொடுங்கள், மற்றவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கும் வழங்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**முதலமைச்சர் கோப்பை!**

அதேமாதிரி, முதலமைச்சர் கோப்பை. முதலமைச்சர் கோப்பையைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் ஒரு பிரிவில்தான் நடத்தினார்கள். ஆனால், நம் திராவிட மாடல் ஆட்சியில்தான் ஐந்து பிரிவுகளிலும் நடத்தினோம். பள்ளி, கல்லூரி, பொதுப் பிரிவு, அரசு ஊழியர், மாற்றுத்திறனாளி என்று ஐந்து பிரிவுகளில் அந்தப் போட்டிகளை நடத்தி, 2023 ஆம் ஆண்டு பார்த்தீர்களென்றால், கிட்டத்தட்ட ரூ.50 கோடியில், 3 இலட்சத்து 76 ஆயிரம் பேர் அந்தப் போட்டியில் கலந்துகொண்டனர். 2024 ஆம் ஆண்டு ரூ.83 கோடியில், 5 இலட்சத்து 29 ஆயிரத்து 558 பேர் போட்டியில் கலந்து கொண்டனர். 2025 ஆம் ஆண்டு ரூ.83 கோடி மதிப்பில், 8 இலட்சத்து 79 ஆயிரத்து 783 பேர். 10 இலட்சம் பேரை விளையாட்டு மைதானத்திற்கு வந்து விளையாடுங்கள் என்று விளையாட வைத்த அரசு, திராவிட மாடல் அரசு. அந்தத் திட்டத்தைத் தந்தது நமது இளந்தலைவர் அவர்கள். இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தையும் நான் படித்துப் பார்த்தேன், இந்த ஆண்டும் ரூ.83 கோடி ஒதுக்கீடு செய்தது, அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சர்வதேசப் போட்டிகள்!**

அதேமாதிரி சர்வதேசப் போட்டிகளைப் பொறுத்த வரை இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம்.

சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் ஷிப்-2022, சென்னை ஓபன் சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப், ஸ்குவாஷ் உலக கோப்பை-2023, ஏழாவது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஷிப்-2023, சர்வதேச அலை சறுக்குப் போட்டி-2023, ஆசிய அலை சறுக்குப் போட்டி-2025, Chennai Grand Masters-2023, Chennai Grand Masters-2024, தெற்காசிய ஜூனியர் தடகள போட்டி-2024, World Table Tennis Star Contender போட்டி, National Track Cycling Championship, 14-வது ஜூனியர் ஹாக்கி உலக கோப்பை போட்டி, 44-வது Chess Olympiad போட்டி, Formula 4 கார் பந்தயம் என இத்தனை போட்டிகள், இன்னும் நிறைய சர்வதேச போட்டிகளை தமிழ்நாட்டின் வரலாற்றில் நடத்திய ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**சென்னையில் கார் பந்தயப் போட்டி!**

குறிப்பாக, இந்த Formula 4 கார் பந்தயத்தைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், 3.7 கிலோ மீட்டர் கொண்ட சாலையில், தெற்காசியாவில் முதல் ஒரே நகரம், சென்னையில்தான் அந்தப் போட்டி நடத்தப்பட்டு, உலக கார் பந்தய ரசிகர்களாலும், தமிழ்நாட்டு மக்களாலும் போற்றப்பட்டது. அன்றைக்கு நீதிமன்றம்வரை சென்றும்கூட, நீதிமன்றம் நடத்துவதற்கான அனுமதியைத் தந்து, வெற்றிகரமாக அந்தப் போட்டியை நடத்தி முடித்தோம். இன்னும் ஒரு முக்கியமான வரலாற்றுப் பதிவை நான் இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

**44வது செஸ் ஒலிம்பிக் போட்டி!**

44-வது Chess Olympiad போட்டி-உலகிலிருக்கிற 186 நாடுகளைச் சேர்ந்த 2,000-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் கலந்து கொண்ட அந்தப் போட்டியை, திராவிட மாடல் ஆட்சியினுடைய தலைவர் மிக மிகச் சிறப்பாக நடத்தி காட்டினார். தமிழ்நாட்டில் நடந்த அந்தப் போட்டியில், விருந்தோம்பல் பற்றி உலகத்திற்கு சொன்னவர் தமிழன் என்ற அடிப்படையில், அவர்களை வரவேற்று, அவர்களுக்குத் தங்கும் இடம் வழங்கி, மிகச் சிறப்பாக அந்தப் போட்டியை நடத்தி காட்டினார்கள். நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற அந்தத் தொடக்க விழாவில் இந்திய பிரதமர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம்-இவையனைத்தையும் உலகெங்கிலும் எடுத்துச்சென்று, 500 பேர் அந்தப் போட்டியைப் பார்த்தார்கள். அந்த அடிப்படையில், ஒவ்வொரு நாட்டினுடைய தேசியக் கொடியை ஏந்தி செல்ல, யாரை அங்கே அனுப்பி வைத்தார்கள் என்றால், அரசு பள்ளிகளில் படித்த மாணவர்களே என்பதை நான் தெவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே மாதிரி, இந்தியாவின் முதல் செஸ் கிராண்ட் மாஸ்டர் யாரென்று பார்த்தால், தமிழ்நாட்டைச் சார்ந்த விசுவநாதன் ஆனந்த் அவர்கள். இன்றைக்கு இந்தியா முழுவதும் 98 பேர் Chess Grand Masters இருக்கிறார்கள். அதில், 98-வது Chess Grand Master யாரென்று சொன்னால், நாகர்கோவிலை சார்ந்த அஸ்வத் என்பவர் இருக்கிறார். அந்த அடிப்படையில் 98 பேர் Chess Grand Masters இருக்கிறார்கள் என்றால், இன்றைக்கு கிட்டத்தட்ட 38 பேர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள்; இன்றைக்கு அதிகம் பேர் இங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால், அது திராவிட மாடல் ஆட்சியினுடைய சாதனை. (மணியடிக்கப்பெற்றது)

**பேரவைத் தலைவர்**: உறுப்பினர், ஒரு செய்தியை நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அகில இந்திய செஸ் சம்மேளம், All India Chess Federation-னுடைய தலைவராக நான் பொறுப்பேற்று, இரண்டு ஆண்டு காலம் இருந்த காலக்கட்டத்தில்தான் முன்னாள் முதலமைச்சர், மிகுந்த போற்றுதலுக்குரிய அம்மா அவர்கள், 29 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி, முதன் முதலில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் உலக செஸ் போட்டியை மரியாதைக்குரிய விசுவநாதன் ஆனந்த் அவர்களும் மற்றும் காரல்சன் அவர்களும் ஆடுகிற அந்தப் போட்டிக் களத்தை சென்னையில் நடத்தியிருக்கிறோம். நேரு உள்விளையாட்டரங்கத்தில் அது சிறப்பாக நடைபெற்றது என்ற அந்த நிகழ்வையும், அந்த நேரத்தில் அவர்கள் நேரடியாகக் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கிய நிகழ்வையும், நான் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

செஸ் போட்டி நடத்துவதில் முந்தைய அரசாங்கம், எவ்வளவு அக்கறையோடு அந்தப் போட்டிகளை நடத்தியது என்பதையும், செஸ் விளையாட்டுக் குழுமத்தின் நிர்வாகியாக இருந்த காரணத்தினால் நான் நன்றாக அறிவேன். இந்தத் தருணத்தில் நான் அகில இந்திய செஸ் சம்மேளத்தின், All India Chess Federation-ன் President ஆக இருந்தபோது நடத்திய அந்த நினைவுகள் என் நெஞ்சத்தைவிட்டு நீங்காது இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தம் என்று நான் கருதுகின்றேன்.

**ஒருங்கிணைந்த விளையாட்டு நகரம்!**

**சிவ.வீ. மெய்யநாதன்:** ஓர் அருமையான தகவலை தந்தீர்கள். அதே மாதிரி இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சியினுடைய சாதனை மட்டுமல்ல, தமிழ்நாட்டிலிருக்கின்ற விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் ஒலிம்பிக் பதக்கம் வேண்டுமென்ற கனவோடு இருக்கின்ற அத்தனை இலட்சக்கணக்கான வீரர்கள்/வீராங்கனைகளுக்கும் முக்கியமான திட்டமாக, நமது திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகர், தலைவர் அவர்கள், Global Sports City-ஐ செம்மெஞ்சேரியில் உருவாக்கினார்; உலகளாவிய ஒருங்கிணைந்த விளையாட்டு நகரம். இந்த உலகளாவிய ஒருங்கிணைந்த விளையாட்டு நகரத்தைப் பொறுத்தவரையில், சென்னைக்கு அருகிலே இருக்கிற செம்மஞ்சேரி பகுதியில் 100 ஏக்கர் இடம் கண்டறியப்பட்டது. அந்த உலகளாவிய ஒருங்கிணைந்த விளையாட்டு நகரத்தில் பல்வேறு வகையான வெளிப்புற மற்றும் உட்புற விளையாட்டு அரங்கங்கள், ஒலிம்பிக் அளவு நீச்சல் குளம், விளையாட்டு அகாடமிகள் மற்றும் பயிற்சி பள்ளிகள், விளையாட்டு அறிவியல் வசதிகள், விளையாட்டு வீரர்களுக்கான தங்குமிடங்கள், விளையாட்டு மருத்துவ மையங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

இந்த உலகாளவிய விளையாட்டு நகரமானது விளையாட்டு வீரர்கள், விளையாட்டு பயிற்சியாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் இவர்கள் அத்தனை பேர்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய நகரமாக அது அமைக்கப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு உலகில் இருக்கிற பல்வேறு இடங்களில் நேரடியாக ஆய்வு செய்திருக்கிறோம்.

குறிப்பாக, சிங்கப்பூர் விளையாட்டு மையம் hi-tech விளையாட்டுப் பூங்கா, சிட்னி ஒலிம்பிக் பூங்கா மற்றும் இலண்டன் ஒலிம்பிக் பூங்கா போன்றவை ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் சிறந்த நடைமுறைகள் ஏற்கப்பட்டுள்ளன. இதன்மூலம் முக்கியமான சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள் மாநிலத்தில் நடைபெற வழிவகுக்கும், பிரபல பாரம்பரிய விளையாட்டுகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்தமுடியும். இளைஞர்களை விளையாட்டை நோக்கி ஈர்க்கமுடியும் என்ற அடிப்படையில் இந்த விளையாட்டு நகரம் உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட அந்த விளையாட்டு நகரம் 18-2-2022 அன்று அன்றைய முதலமைச்சர் அவர்களால் 256 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கப்பெற்றிருக்கிறது. நான் இந்த கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தை தேடித் தேடிப் பார்த்தேன். எங்கேயும் அதற்கான எழுத்துகள், அந்த வரிகள் அந்தப் புத்தகத்தில் இல்லை.

**குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி திட்டத்தை தொடங்கிடுக!**

ஏனென்றால், 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில், நீரஜ் சோப்ரா என்ற இளைஞன் ஈட்டி எறிதலில், 85.67மீ தூரம் ஈட்டி எறிந்து தங்கப்பதக்கம் பெற்றபொழுது இந்தியாவில் இருக்கிற 140 கோடி மக்களும் நாமே பதக்கம் பெற்ற மாதிரி உணர்ந்தோம். இந்த Global Sports City உருவாக்கப்பட்டால் தமிழ்நாட்டிலிருந்து ஒரு வீரனோ, ஒரு வீராங்கனையோ எதிர்காலத்தில் நடக்கின்ற அந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வெல்லக்கூடிய அளவில்தான் அந்த Global Sports City உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு, இது மிகமிக முக்கியமான திட்டம். விரிவுபடுத்தப்பட்ட மெட்ரோ அருகில் அந்த Global Sports City பணிகள் நடைபெறுகிறது. எனவே, இந்த அரசு அந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி எதிர்காலத்தில் sports economy என்று சொல்லக்கூடிய, ரூ.256 கோடியில் கட்டப்படுகிற அந்த விளையாட்டு அரங்கில் எதிர்காலத்தில் 20,000 கோடி ரூபாய்க்கு மேலான வருமானம் நமக்கு வந்துசேரும். (மணியடிக்கப்பெற்றது) தமிழர்களின் பெருமையை உலகெங்கும் கொண்டு சேர்க்கும். எனவே, Global Sports City திட்டத்தை தொடங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, பள்ளிகளில் ஒருமணி நேரம் extra-ஆக விளையாடுவதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் கொடுக்கிறோம் என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். கிட்டத்தட்ட 37,500 பள்ளிகள் இருக்கின்றன. இப்படி எல்லா மாணவர்களும் வெளியில் வரும்போது, அவர்களுக்குத் தேவையான விளையாட்டு மைதானங்கள் போன்றவை கண்காணிக்கப்பட்டதா? ஒருவேளை உடற்கல்வி ஆசிரியர்கள் மட்டும் தான் அப்பணியை பார்வையிட வேண்டுமா, கூடுதலாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா, அதற்காக நிதியமைச்சர் அவர்கள் ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**பட்டா வழங்கிடுக!**

அதேமாதிரி எனது ஆலங்குடி தொகுதி, கல்லாலங்குடி ஊராட்சியில் கலிபுல்லா நகர், பாரதியார் நகர் பகுதிகளில் நெட்டுத்துக்கரை பகுதிகளில் கிட்டத்தட்ட 300 குடும்பங்கள் 80 ஆண்டுகளாக இருக்கிறார்கள். அங்கே சேஷாயசமுத்திர குளம் என்கிற குளம் கைவிடப்பட்டது. சான்றுகளே இருக்கின்றன. அதனால், அரசு முடிவெடுத்து அந்த 300 குடும்பங்களுக்கும் பட்டா வழங்கவேண்டும். அதேமாதிரி ஆலங்குடி தொகுதியில், ஆலங்குடி எஸ்.எஸ். நகர் பகுதியில் கிட்டத்தட்ட 79 பேர் நத்தம் பட்டாவில், file எல்லாம் தயார் செய்யப்பட்டு CLA-வில் இருக்கிறது. பட்டா வழங்குவதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேமாதிரி மயிலாடுதுறை தொகுதி, சீர்காழி வட்டம், நெப்பத்தூர் கிராமத்தில் 200 பேர் இருக்கிறார்கள். அவர்கள் தனியார் நிலத்தில் இருக்கிறார்கள். நான் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த போது ரூ.84 இலட்சம் பணம் ஒதுக்கி கொடுக்கப்பட்டது. அதை கண்காணித்து அந்த மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இந்தப் பேரவையில் பேசுவதற்கான அனுமதியைத் தந்த தங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு சிவ.வீ.மெய்யநாதன் உரையாற்றினார்.